Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 161/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW9** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஹரிகரன் |
| Father/Husband Name | : | காந்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | கிராம உதவியாளர் |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2026.

<u>(4,6,7 எதிரிகள் ஆஜரில்லை, எதிரிகள் தரப்பில் BNSS–355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் குரூப் கிராம உதவியாளராக கடந்த 18.01.2023 முதல் பணிபுரிந்து வருகிறேன். சா.ப.சா. 11 ரோட்டிரிகோ இராமேஸ்வரம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தார். தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். எதிரிகள் சொர்கேஷ்வரன், அயன் சரண்குமார், ஹரி சூர்யா, சதீஷ்குமார் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். கடந்த 15.01.2025 ம் தேதி நானும் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவும் அலுவலகத்தில் இருந்தபோது அன்று மதியம் 1.45 மணியளவில் இராமேஸ்வரம்

கோவில் காவல் வட்ட ஆய்வாளரிடம் இருந்து எங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. காவல் ஆய்வாளர் இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி செல்லும் சாலைக்கு மேற்கே உள்ள நம்புகோவிலுக்கு வரும்படி சொன்னதால் நானும் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவும் 2.15 மணியளவில் சென்றோம். நாங்கள் அங்கு சென்றபோது காவல் ஆய்வாளருடன் போலிசாரும் இரண்டு நபர்களும் இருந்தார்கள். அந்த இரண்டு நபர்கள் யார் என்றால் நீதிமன்றத்தில் 1 மற்றும் 4 ஆக இருக்கக்கூடிய நபர்கள். அவர்களின் பெயர் சொர்கேஷ்வரன் மற்றும் அயன் சரண்குமார். எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் முதலில் சொர்கேஷ்வரனை விசாரித்தார். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்திகளையும் இரத்தக்கரை படிந்த ஆடைகளையும் நம்புகோவிலுக்கு வடக்கே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். அதன்பிறகு அயன்சரண்குமாரை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் விசாரித்தார். அவரும் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரண்டு கத்திகளையும் இரத்தக்கரை படிந்த ஆடைகளையும் சொர்கேஷ்வரன் மறைத்து வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகிலேயே மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி இரண்டு எதிரிகளும் தனித்தனியாக சொன்ன ஒப்புதல் வாக்குமூலங்களை ஆய்வாளர் முன்னிலையில் எழுதி எதிரிகளிடமும் எங்களிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2வது கையெழுத்து என் கையெழுத்துதான். அதன்பிறகு இரண்டு எதிரிகளும் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னவாறு அவர்கள் மறைத்து வைத்திருந்த இடத்திற்கு அழைத்து சென்றார்கள். மதியம் 4.00 மணியளவில் சொர்கேஷ்வரன் தான் மறைத்து வைத்திருந்த மூன்று கத்திகளையும், இரத்தக்கரை படிந்த ஒரு வெளிர் பச்சை நிறம் கொண்ட சட்டை மற்றும் கருப்பு நிற டிராக் பேன்ட் ஒன்றையும் எடுத்து கொடுத்தார். மேலும் நீல நிற ஜீன்ஸ் டவுசர் ஒன்றையும் மற்றும் கருப்பு வெள்ளை மஞ்சள் கலரில் கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்றையும் எடுத்துக்கொடுத்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றும்போது ஒரு

அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என் கையெழுத்துதான். சொர்கேஷ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4.** அத்தாட்சி **அ.சா.ஆ.5.** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 5 கத்திகளில் கைப்பிடியில் சிவப்பு, பச்சை, சிமெண்ட் கலர் போட்ட கத்திகளைத்தான் சொர்கேஷ்வரன் எடுத்து ஆஜர் செய்தார். அயன் சரண்குமார் என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பிடிகளில் நீல மற்றும் செய்தித்தாள் ஒட்டப்பட்ட பச்சை நிறமுள்ள இரண்டு கத்திகளை எடுத்து ஆஜர் செய்தார். ஒரு கருப்பு டிராக் பேன்ட் ஒன்றையும் சிமெண்ட் கலர் நிறமுள்ள டிசர்ட் ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்தார். கருப்பு வெள்ளை நிற முழுக்கை சட்டையில் ஆங்கில எழுத்துக்கள் கொண்ட ஒரு சட்டையையும், வெள்ளை மஞ்சள் கருப்பு கலர் கட்டம் போட்ட ஒரு கைலியையும் , TN 65 BC 0262 என்ற Hero Splendor Plus வாகனத்தையும் எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவும் கையெழுத்து செய்தோம். அயன்சரண்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6**. அத்தாட்சி **அ.சா.ஆ.7**. நீதிமன்றத்தில் சாட்சியால் அடையாளம் காட்டப்பட்ட கத்திகள் முறையே **அ.சா.பொ.1 முதல் 5**. சாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட ஆடைகளைத்தான் எதிரி சொர்கேஷ்வரனும் அயன் சரண்குமாரும் ஆய்வாளரிடம் எடுத்து ஆஜர் செய்ததாக கூறினார். 16.01.2025 ம் தேதி மதியம் 12.45 மணியளவில் நானும் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவும் அலுவலகத்தில் இருந்தபோது இராமேஸ்வரம் கோவில் வட்ட காவல் ஆய்வாளரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. இராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி செல்லும் சாலையில் வாட்டர் பம்ப் ஹவுஸ் பேச்சு வழக்கில் வாட்டர்ஸ் என அழைக்கப்படும் இடத்திற்கு வரச்சொன்னார். நானும் கிராம நிர்வாக அலுவலரும் அங்கு சென்றபோது அங்கு காவல் ஆய்வாளருடன் ஒரு நபர் இருந்தார். அந்த நபர் நீதிமன்றத்தில் இரண்டாவதாக நிற்கக்கூடிய ஹரிசூர்யா என சாட்சி சரியாக அடையாளம் காட்டினார். காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அவரை

விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தின்போது பயன்படுத்திய TN 65 AL 5868 என்ற கருப்பு சிவப்பு நிறமுள்ள பல்சர் பைக்கை வாட்டர்ஸ்க்கு செல்லும் வழியில் நிறுத்தியிருப்பதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அந்த இடத்திற்கு அழைத்து சென்று அந்த இருசக்கர வாகனத்தை காண்பித்தார். ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து அந்த இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார். எதிரி ஹரி சூர்யா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 8.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தை கைப்பற்றும்போது தயார் செய்யப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.9.** பின்பு 18.01.2025ம் தேதி ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் தெற்கு கரையூர் பூமாரியம்மன் கோவிலுக்கு வரச்சொன்னதன்பேரில் சென்றோம். நாங்கள் சென்றபோது மணி மதியம் 1–1.15 இருக்கும். அங்கு நாங்கள் சென்றபோது காவல் ஆய்வாளருடன் சதீஷ்குமார் என்ற நபர் இருந்தார். அந்த நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. என்னால் அடையாளம் காட்டமுடியும். காவல் ஆய்வாளர் அவரை விசாரித்தபோது தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார். அதில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய மூன்று கருங்கற்களை சம்பவ இடத்தில் தூக்கி எறிந்ததாகவும் தன்னை அழைத்து சென்றால் அதை காண்பித்து எடுத்துகொடுப்பதாகவும் சொன்னார். அதன்பேரில் அவர் சொன்ன இடத்திற்கு அழைத்து சென்று மூன்று கற்களையும் எடுத்து கொடுத்தார். அந்த மூன்று கற்களையும் ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். மேலும் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஒரு கட்டையை புலித்தேவன் நகருக்கு தெற்கு பக்கம் உள்ள கருவேல மரத்தூரில் தூக்கி எறிந்ததாக சொன்னார். அதன்படி அவர் அழைத்து சென்று அந்த கட்டையை எடுத்து கொடுத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கட்டைதான் ஆய்வாளர் எதிரி சதீஷ்குமார் எடுத்து ஆஜர் செய்த கட்டை என கூறினார். எதிரி சதீஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 10**. அத்தாட்சி **அ.சாஆ.11.** ஒப்புதல் வாக்குமுலம் மற்றும அத்தாட்சியில்

உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மூன்று கற்கள்தான் எதிரி சதீஷ்குமார் எடுத்துகொடுத்த மூன்று கற்கள். அந்த கற்கள் **அ.சா.பொ. 6**. கட்டை **அ..சா.பொ.7**. இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். (அ.சா.ஆ–4 முதல் அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.பொ.1 முதல் 7 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் இராமேஸ்வரம் கிராம உதவியாளராக சம்பவத்திற்கு முன்பு எத்தனை வருடங்களாக பணியாற்றினேன் என்றால் இரண்டு வருடங்கள். நான் பிறந்து வளர்ந்தது இராமேஸ்வரம் என்றால் சரிதான். எனக்கு இராமேஸ்வரம் தெற்கு கரையூர் மற்றும் சேரன்கோட்டை நன்கு தெரியும் என்றால் சரிதான். அங்கு குடியிருப்பவர்களை நன்கு தெரியும் என்றால் சரியல்ல. சில நபர்களை தெரியும். நம்பு சரணை சம்பவத்திற்கு முன்பு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்பவத்தில் இறந்த நபர் யார் என தெரியுமா என்றால் செல்வராஜ் மகன் நம்புராஜ். 15.01.2025, 16.01.2025, 18.01.2025 ஆகிய மூன்று தேதிகளிலும் காவல் ஆய்வாளர் தொடர்பு கொண்டது கிராம நிர்வாக அலுவலரைத்தான். என்னை தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலரிடம் எதிரிகளை கைது செய்ததாகவும் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலமும் மற்றும் அத்தாட்சியின் பேரில் சொத்துக்களை கைப்பற்றவேண்டும் என்பதற்காக நம்புகோவிலுக்கு தெற்கே உள்ள சவுக்கு காட்டிற்கு வருமாறு கூறினார் என்றால் சரிதான். நாங்கள் இருந்த கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் நம்புகோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ. நம்பு கோவிலுக்கு அருகில் உள்ள பகுதி முழுவதும் சவுக்கு தோப்பு என்றால் சரிதான். நானும் கிராம நிர்வாக அலுவலரும் காவல் ஆய்வாளர் இருந்த சவுக்கு தோப்பிற்கு சென்றபோது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் மற்றும் அவருடன் 5,6 போலிசார் மற்றும் எதிரிகளான சொர்கேஷ்வரனும் நம்பு சரணும் இருந்தார்கள். நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சொர்கேஷ்வரன் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொர்கேஷ்வரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது

எத்தனை நபர்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 9 எதிரிகள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 9 நபர்களும் எதிரி சொர்கேஷ்வரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது அங்கு தான் இருந்தார்கள் என்றால் இல்லை. அந்த 9 நபர்களில் மற்ற நபர்கள் எங்கு சென்றார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொர்கேஷ்வரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது எதிரிகள் ஹரிசூர்யா, சதீஷ்குமார் ஆகிய இருவரும் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக எனக்கு தெரிய வந்ததா என்றால் தெரியவந்தது. ஆனால் அவர்கள் யார் என்று அவர்களை கைது செய்து எங்கள் முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்வரை தெரியாது. 15.01.2025 ம் தேதி காவல் ஆய்வாளர் சொர்கேஷ்வரனையும் அயன் சரண்குமாரையும் எங்கிருந்து அழைத்து வந்தார் என்றால் தெரியாது. தெற்கு கரையூர் கிராமத்திற்கும் நான் கிராம உதவியாளர் என்றால் சரிதான். 14.01.2025 ம் தேதி தெற்கு கரையூர் கிராமத்தில் நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 15.01.2025 ம் தேதி ஆய்வாளர் எங்களை கூப்பிடுவதற்கு முன்னால் 14.01.2025 ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நானும் கிராம நிர்வாக அலுவலரும் சென்றோமா என்றால் இல்லை. சொர்கேஷ்வரன் எடுத்து கொடுத்ததாக சொல்லும் கத்திகளில் அடையாளங்கள் இருந்ததா என்றால் இருந்தது. எந்தெந்த எதிரிகள் எந்தெந்த கத்திகளை பயன்படுத்தினார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் எதிரிகள் சொர்கேஷ்வரன் மற்றும் அயன் சரண்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தெரியும். நான் மொத்தம் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பூமாரியம்மன் கோவில் முன்பு சாதாரணமாக கற்கள் கிடக்கும் என்றால் சரிதான். சவுக்கு கம்பு இராமேஸ்வரம் பகுதிகளில் சாதாரணமாக கிடைக்கும்/இருக்கும் என்றால் சரிதான். நான் இதுபோன்ற வேறு வழக்குகளிலும் எதிரிகள் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக கையெழுத்து செய்ய சென்றுள்ளேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோ தற்போதும் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். 15.01.2025 ம் தேதி எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றோம் என்றால் செல்லவில்லை. 16.01.2025 மற்றும் 18.01.2025 தேதிகளிலும் நாங்கள் காவல்நிலையம் சென்றோமா என்றால் இல்லை. எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களை

கைப்பற்றும்போது பார்த்ததற்கு பின்னால் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு எங்களை அழைத்து விசாரித்தபோது பார்த்தேன். எங்களை எவ்வளவு நாட்கள் கழித்து காவல் ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார் என்றால் ஞாபகமில்லை. என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையிலும் இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் எந்த எதிரிகளையும் கைது செய்யவில்லை என்றால் சரிதான். நான் இராமேஸ்வரத்தில் எந்த தெருவில் குடியிருந்தேன் என்றால் சௌந்தர்யம்மன் கோவில் தெருவில். தெற்கு கரையூருக்கும் நான் குடியிருந்த சௌந்தர்யம்மன் கோவில் தெருவிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5–6 கி.மீ தூரம் இருக்கும். சேரான்கோட்டையில் பூமாரியம்மன் கோவில் என கோவில் உள்ளதா என்றால் இல்லை. நான் சொன்ன மாதிரி இராமேஸ்வரம் கோவில் வட்ட காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர் ரோட்டிரிகோவிற்கு தொலைபேசியில் எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றும் அந்த தகவலின் அடிப்படையில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நம்புகோவிலுக்கும் எதிரிகள் சொர்கேஷ்வரன் மற்றும் அயன் சரண்குமார் ஆகிய இருவருரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் இருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீ. எந்த திசை என்றால் தென்கிழக்கு. நான் சொன்ன மாதிரி நானும் கிராம நிர்வாக அலுவலரும் எதிரிகள் சொர்கேஷ்வரன் மற்றும் அயன் சரண்குமாரை பார்க்கவில்லை என்றும் அவர்கள் இருவரும் எங்கள் முன்னிலையில் ஆய்வாளரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தானாக முன்வந்து கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் நான் சொன்ன சான்றுபொருட்கள் எதையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 16.01.2025 ம் தேதி நான் சொன்னதுபோல் நானும் கிராம நிர்வாக அலுவலரும் ஹரிசூர்யாவை பார்க்கவில்லை என்றும் அவரும் எங்கள் முன்னிலையில் ஆய்வாளரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தானாக முன்வந்து கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் நான் சொன்ன சான்றுபொருட்கள் எதையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 18.01.2025 ம் தேதி நான் சொன்னதுபோல் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சதீஷ்குமாரை பார்க்கவில்லை என்றும் அவரும் எங்கள் முன்னிலையில்

ஆய்வாளரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தானாக முன்வந்து கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் நான் சொன்ன சான்றுபொருட்கள் எதையும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன வாட்டர்ஸ் என அழைக்கப்படும் வாட்டர் பம்ப் ஹவுஸ் இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வாட்டர் பம்ப் ஹவுஸ்–ஐ இயக்குவதற்கு நகராட்சியில் வேலை பார்க்கும் பணியாளர்கள் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். வாட்டர் பம்ப் ஹவுஸ் அருகே எதிரி ஹரிசூர்யாவிடம் இருந்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதாக சொல்லப்படும் விவரம் நகராட்சி பணியாளர்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த விதமான நிகழ்வுகளும் நடைபெறவில்லை என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.